மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

ஊராட்சி ஒன்றிய டிராக்டர் ஓட்டுநர்களுக்கு வழங்கப்படும் ஊதியம்

* வினா எண். 611— திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றிய டிராக்டர்கள் ஓடாத காலங்களிலும் பழுதுபார்க்க விடப்படும் காலங்களிலும் அவற்றின் டிரைவர் களுக்கு கொடுக்கப்படும் ஊதியங்கள் தலநிதிக் கணக்கு தணிக்கையில் ஆட்சேபிக்கப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) ஆம்.

(ஆ) 60 நாட்களுக்கு மேல் டிராக்டர் பணியின்றி இருந் தாலோ அல்லது பணிமனையில் இருக்க நேரிட்டாலோ அதனை உடனடியாக ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு தெரிவித்து உரிய ஆணைகள் பெற்று தணிக்கை தடைகள் எழாவண்ணம் பார்த்துக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே. இந்த ஊராட்சி ஒன்றிய டிராக்டர்கள் பணியில் இல்லாது 60 நாளைக்கு மேல் இருக்கக் கூடாது என்று ஆணையிட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இந்த இடைக் காலத்தில், அந்த ஊராட்சி ஒன்றியத்தில் ஓட்டுநராக பணி யாற்றுபவர்களுக்கு ஊதியம் கொடுக்கக்கூடாது என்று தணிக்கை அதிகாரிகள் ஆட்சேபம் தெரிவித்து இருப்பதாகத் தெரிகிறது. அதைப் போக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட ஆட்சேபணை செய்து, அதன் மூலம் சம்பளப் பிடித்தம் செய்வதாக தலைமை உள்ளாட்சிக் கணக்காய்வாளர் கூறியிருக்கிறார்.

1979 ஏப்ரல் 2]

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய டிராக்டர்கள சம்பந்தமான கேள்வி இது என்று சொல்லி, தயவு செய்து அமைச்சர் தனிக்கேள்வி போடுங்கள் என்று சொல்லிவிடக்கூடாது. பழனி தாலூக்காவில் மொத்தம் 3-4 பழுதடைந்து கிடக்கிறது. அதற்கு கிட்டத்தட்ட 85,000 ரூபாய் இதுவரையில் செலவிடப்பட்டு இருக்கிறது 3 ஆண்டுகளாக எந்த விதமான பிரயோசனமும் இல்லாமல் இருக்கிறது. அந்த இயக்குனரையும்—டிரைவரையும் வேலையை விட்டு நீக்கிவிட்டார்கள், இது சம்பந்தமாக நான் அரசாங்கத்திற்கு ஏற்கனவே புகார் அனுப்பி இருந்தேன். இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது சம்பந்தமாக அமைச்சர் விளக்கம் அளிப்பாரா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அதைப்பற்றிய தகவல் இல்லை. ஆனால் நிச்சயமாக அரசு கவனிக்கும்.

நகராட்சிகளில் சொத்து வரி.

*வினா எண். 612—திரு. கு. ரமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள நகராட்சிகளில் சொத்து வரி உயர்த்துவதை நிறுத்தி வைக்க அரசு உத்தரவிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு காலம் நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து ;

(அ) ஆம்.

(ஆ) மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்றங்கள் பொறுப்பேற்கும் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, தனி அதிகாரியின் ஆட்சியின் கீழ் இருக்கும்படியான நகராட்சிகளில் 3 மடங்கு, 4 மடங்கு, 5 மடங்கு கூட வரி உயர்த்தப்பட்டுள்ள விவரங்கள் குறித்து மக்களிடமிருந்து ஏராளமான ரிப்போர்ட்டுகள், குறிப்பாக கோவை நகராட்சி மன்றத்தில் இருந்து அப்படிப்பட்ட ரிப்போர்ட்டுகள் அரசுக்கு வந்துள்ளதா? அது நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள், அங்கே அதை வசூலிப் பதற்கு நிர்ப்பந்தம் செய்வது அரசுக்குத் தெரியுமா?